1981 பிப்ரவரி 26] [திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

சில கிராம அதிகாரிகள் என்னைப் போன்றவர்களிடம் வந்து சொல்கின்றபோது நாங்கள் பதவியில் இருக்கும்போது இறந்தால் ரூபாய் 10,000 மாவது கிடைத்திருக்கும். இப்போது எங்களுக்கு அதுகூட இல்லை என்ற நிலை இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆகவே இதையெல்லாம் கவனத்தில் கொண்டு ரூபாய் 10,000குக் குறையாமல் அவர்களுக்கு நஷ்டயீடு கொடுப்பதோடு இன்றையத் தினம் அவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடிய நேரத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கிராம அதிகாரிகளை விடுதலை செய்து அவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவிற்கிணங்க, பேரவை அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

27—2—1981 (வெள்ளிக்கிழமை)	அரசு அலுவல்கள்—சட்டமுன் வடிவுகள்.
28—2—1981 (சனிக்கிழமை)	ஷ
1—3—1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
2—3—1981 (திங்கட்கிழமை)	அரசு அலுவல்கள்—சட்ட முன்வடிவுகள்.
3—3—1981 (செவ்வாய்க்கிழமை)	தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலைகுறித்து விவாதம்.
4—3—1981 (புதன்கிழமை)	ஷ
5—3—1981 (வியாழக்கிழமை)	தனி உறுப்பினர் அலுவல்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

6—3—1981 (வெள்ளிக்கிழமை) 1. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகளுக்கு திரு. உமாநாத் அவர்கள் கொடுத்துள்ள திருத்தங்கள்.

2. அரசு அலுவல்கள்—

(அ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன் வடிவு—ஆய்வு செய்தலும் நிறை வேற்றுதலும்.

(ஆ) மற்ற சட்டமுன் வடிவுகள்.

7—3—1981 (சனிக்கிழமை) அரசு அலுவல்கள்—சட்ட முன்வடிவுகள்.

எல்லா நாட்களிலும் பேரவை வழக்கம்போல் காலை 9-00 மணிக்குக் கூடும்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஈ) பகுதி நேர கிராம அலுவலர்கள் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு, 1981—தொடர்ச்சி

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, 1981-ம் ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன் வடிவின் மீது நான் சார்ந்திருக்கக் கூடிய ஜனதா கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன். கிராமப் புறத்தினுடைய நிர்வாகத்திலே முன்னேற்றம் செய்ய வேண்டு மென்ற அடிப்படையில், இந்தச் சட்டத்தின் மூலம் பகுதிநேர அலுவலர்களை நீக்கி, முழுநேர அலுவலர்களைப் போட வேண்டுமென்ற அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டுவந்தா லும், இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கின்ற முறையை நாங்கள் ஆதரிக்கவில்லை. காரணம், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்றபோது, இதை ஒரு அவசரச் சட்டமாகக் கொண்டு வந்ததை நாங்கள் எதிர்க்கிறோம். இதைச் சட்டமன்றத் திலே ஒரு மசோதாவாகக் கொண்டு வந்து, இதைச் சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் விவாதித்து ஒருமித்த ஏற் பாடாக இருந்திருக்குமானால், நல்ல ஜனநாயக மரபுப்படி இது நடந்திருக்கின்றது என்பதை நாங்கள் ஒத்துக் கொள்ள முடியும், அதற்குப் பதிலாக, மாற்று ஏற்பாடு செய்கின்ற வகையில், அளவிலே இதைச் செய்திருக்கிறார்கள். ஆனால், உண்மையிலே முழுமையான அளவிலே ஒரு மாற்று ஏற்பாடாக இதைச் செய் திருக்கின்றார்களா என்று பார்த்தால் இல்லை. இதனால்